**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை - 2022**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபையின்"சபை" மற்றும் அதன் துணை நிறுவனத்தின் "தொகுதி" 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின்மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.
2018இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடல்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது கம்பனியின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,
- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 1981 இலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான காலத்தில் 3,912 சேவை வழங்குனர்கள் தொடர்பாக 2021 ஏப்ரல் 28 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 581.35 மில்லியன் பங்களிப்பு பணம் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை அதிகாரச்சட்டத்தின் 16(3) ஆம் பிரிவின் பிரகாரம் அந்த அந்த அங்கத்தவர்களின் தனிப்பட்ட கணக்கிற்கு செலவுவைக்கப்படாது ஏனைய தற்காலிக கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதனுள் 7 ஆண்டுகளுக்கும் 41 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக காணப்பட்டு வரும் மீதி ரூபா 90.76 மில்லியனாகும். | பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ள பங்களிப்பு பணத்தை பகுப்பாய்வு செய்வதற்காக தொலைபேசி அழைப்பினை வழங்குதல்,பதிவுத் தபாலில் கடிதங்களை அனுப்பிவைத்தல், சபையின் அமுல்ப்படுத்தும் உத்தியோகத்தர்களை உரிய நிறுவனங்களுக்கு அனுப்பி தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை செய்யப்படுகின்றது. அவ்வாறே எதிர்காலத்தில் ஊழியர் சேமலாப நிதியத்திட்டமிருந்து சீ அறிக்கையினைப் பெற்று அந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு படிவம் II அறிக்கையினைத் தயாரித்து அதற்கிணங்க அங்கத்தவர் கணக்குகளை நாளதுவரையாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | பங்களிப்பு பணம் செலவு வைக்கப்பட வேண்டிய அங்கத்தவர்களை சரியாவும் துரிதமாகவும் இனங்காணக்கூடிய முறைமையில் அங்கத்தவர் பணத்தை அறவீடு செய்யும் நடைமுறையினை மேம்படுத்துதல் மற்றும் இனங்காணப்படாத அங்கத்துவ பணத்தை இனங்காண்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை அதிகாரச்சட்டத்தின் 16(3) ஆம் பிரிவின் பிரகாரம் | அங்கத்தர்களின் கணக்குகளுக்கு செலவுவைக்கப்படாத மீதிகளை குறைப்பதற்காக 2023 பெப்ரவரி மாத்திலிருந்து 15 ஊழியர்களுக்கு | நீதிமன்ற நடைமுறைகளின் மூலம் அறிவிடப்பட்ட பணத்தை |

| | | | |
|---|---|---|---|
| | யாராவது ஒரு ஊழியர் சம்பந்தமாக (i) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையினால் மேற்பார்வை நடவடிக்கையின் மூலம் 1985 இலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை அறவிடப்பட்டிருந்த ரூபா 1,511.14 மில்லியன் பெறுமதியான பங்களிப்பு பணம் மற்றும் மிகைக் கட்டண பணத்தில் ரூபா 71.25 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரை ஊழியர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவுவைக்கப்படவில்லை. | மேற்பட்ட நபர்கள் சேவையாற்றும் நிறுவனங்களின் கொடுப்பனவுகளை இலத்திரனியல் கொடுப்பனவுகளின் கீழ் செய்வதற்கும் சபையின் அமுலப்படுத்தும் உத்தியோகத்தர்களினூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் ஊழியர் சேமலாப நிதியத்தினூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி அங்கத்தர்களின் கணக்குகளுக்கு செலவுவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கணனி முறைமைக்கு இணங்க ஊழியர்களின் தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவுவைக்கப்படாத மீதி ரூபா 781.05 மில்லியனாக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 34 இன் கீழ் அந்த மீதி ரூபா 290 மில்லியனாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் அங்கத்துவப் பணத்தின் பகுப்பாய்வு 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்படும். எனவே உண்மையாக நடைமுறைச் சிக்கலின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படாத அங்கத்துவப் பணமானது 2019 ஆம் ஆண்டிற்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கத்துவ பணமாகும். அதன் காரணமாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 34 இன் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதானது நீண்ட காலமாக உண்மையாகவே நடைமுறைச் சிக்கல் உள்ள மீதிகளின் பெறுமதியாகும். | அங்கத்துவ கணக்கினுள் உள்ளடங்கியுள்ள இந்த மீதியின் சேர்மானத்தை வகைப்படுத்தி கணக்கு குறிப்புகளின் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மறறும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெற வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தற்பொழுது கலைக்கப்பட்டு வருகின்ற ஒரு கம்பனியின் வாக்குறுதிப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 12.17 மில்லியன் மற்றும் தொகுதிக்கடன்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 4.45 மில்லியன் முறையே 2002 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளின் போது தேறப்படவேண்டியிருந்தது. மேலும் வனிகக்கம்பனியின் தொகுதிக்கடன்களில் முதலீடு | இக்கம்பனியை கலைப்பதற்காக மூன்றாம் தரப்பினர்களால் செய்யப்பட்ட ?வேண்டுகோள்களுக்கு ஒரு கலைப்பாளரினை நியமிக்குமாறு நீதி மன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது கலைத்தல் நடவடிக்கை இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை. | பின்தொடர் நடவடிக்கை மேற்கொண்டு அறவிட வேண்டிய வட்டி வருமானத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிந்து 2006 திசெம்பர் 31 வரை அறவிட வேண்டிய வட்டி வருமானம் ரூபா 15.21 மில்லியன் மற்றும் வாக்குறுதிப்பத்திரங்களின் முதலீடுகளிலிருந்து அறவிட வேண்ய வட்டி வருமானம் ரூபா 367,724 இனை அறவீடு செய்வதற்காகசட்டதீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரை அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | பல ஆண்டுகளாக தோட்டக் கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த தொகுதிக்கடன் வட்டிப் பணத்தில் இன்னும் கிடைக்க வேண்டிய ரூபா 9.39 மில்லியன் பணம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கம்பனியின் நிகழ்கால நிதி நிலைமையினை கவனத்தில் கொண்ட போது இந்த வட்டிப் பணத்தை தீர்ப்பதற்கு குறித்த சில காலம் எடுக்கலாம் எனவும் இது தொடர்பான மேலதிக திட்டத்தினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்து அப்பிரேரணையை முன்வைத்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யப்படும். | பின்தொடர் நடவடிக்கை எடுத்து அறவிட வேண்டிய வட்டி வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | உயர் கல்வி புலமைப்பரிசில் நடைமுறையின் கீழ் கொடுப்பனவு செய்வதற்காக 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட மீதியான ரூபா 147.16 மில்லியனுள் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகள் தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்ட முறையே ரூபா 0.12 மில்லியன் மற்றும் ரூபா 3.04 மில்லியன் இன்னும் தீர்த்துவைக்கப்பட வேண்டியிருந்தது. | உரித்தாளர்களின் தொடக்க பதிவேட்டில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு பதிவுத்தபாலின் மூலம், தொலைபேசியின் மூலம், மின் அஞ்சலின் மூலம் மற்றும் வட்ஸ் அப்பின் மூலம் தெரிவித்துக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருந்தும் நல்ல பதில் கிடைக்காததனால் இதுவரை தீர்த்துவைப்பதற்கு முடியாதுள்ளது. | உரிய உரித்தாளர்களை இனங்காண்பதற்கு முறையான ஒரு வேலைத்திட்டத்தினை தயாரித்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 1994 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டுவரை ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் நிதி உதவி முறைமையின் கீழ் 73 மாணவர்களுக்குச் செலுத்தப்படாத ரூபா 1.27 மில்லியன் பணம் உரிய | 1994 - 2014 காலப்பகுதிக்குரிய உரிமை கோரப்படாத புலமைப்பரிசிலாளர்களை இனங்காண்பதற்கு போதியளவு தகவல்கள் இல்லாததனால் இந்த மீதிகளை தீர்த்துவைக்க முடியாதுள்ளது. கணக்காய்வு | உரிய உரித்தாளர்களை இனங்காண்பதற்கு முறையான ஒரு வேலைத்திட்டத்தை தயாரித்து தீர்த்துவைப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | புலமைப்பரிசில்தாரர்களுக்குச் செலுத்தப்படாது மீளாய்வாண்டின் போது வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. நிதி நிலைமைக் கூற்றில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் நிதி உதவியினை கொடுப்பனவு செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மீதியான ரூபா 235.3 மில்லியனில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகள் தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்ட முறையே ரூபா 0.075 மில்லியன் மற்றும் ரூபா 13.6 மில்லியன் பணம் இன்னும் தீர்த்துவைக்கப்பட வேண்டியுள்ளது. | மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் போது அடைந்துகொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் 227/2022 ஆம் இலக்க பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் 2022 ஒக்தோபர் 24 ஆந் திகதிய பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது இப்பணத்தை சபையின் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதியில் உரிமைகோரப்படாத மரண பிரதிபலன்களாக 1,207 அங்கத்தவர்களுக்கு ரூபா 21.43 மில்லியன் செலுத்த வேண்டியிருந்தது. 1995 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரையான காலத்தில் மரணமடைந்த நபர்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய மரண பிரதிபலன்களின் காலப்பகுப்பாய்வில் 07 ஆண்டுகளுக்கும் 20 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலப்பகுதி தொடர்பாக 786 நலன்பெறுனர்களுக்குச் செலுத்த வேண்டிய மரண பிரதிபலன் பணம் ரூபா 8.87 மில்லியனாகும். | அங்கத்தவர்களின் மரணத்திற்குப் பின்னர் அந்த அங்கத்தவரின் பிரதிபலன்களுக்காக ஒரு நபருக்கு மேல் உரித்தாளர்கள் அனைவரும் ஒன்றாக முன்வராமை (அதாவது சில உரித்தாளர்கள் வெளிநாட்டில் இருத்தல்) மற்றும் சில நபர்களுக்கு எழுத்து மூல தகவல்களைச் (சன்றிதழ்களை துரிதமாக சமர்பிக்காமை) சமர்ப்பிப்பதற்கு உள்ள சிக்கல்களினால் அவர்களின் பகுதி சபையின் கணக்குகளில் நிறுத்திவைத்து ஆவணங்களைச் சமர்ப்பித்துள்ள நபரின் உரித்துள்ள பகுதிகளை மாத்திரம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமை நிகழ்காலத்தில் கடைப்பிடிக்கப்படுகின்ற நடைமுறையாகும். | உரிய உரித்தாளர்களை கண்டு முறையான ஒரு வேலைத் திட்டத்தினைத் தயாரித்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனானஇணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய | பிரசை/ சேவை நாடுனர் நியதிச்சட்டம் தயாரித்து | ஒட்டுமொத்த சபைக்குமான | சுற்றறிக்கை அறிவுறுத்தல்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | 05/2008 ஆம் இலக்க மற்றும் 2018 சனவரி 24 ஆந் திகதிய 05/2008 (1) ஆம் இலக்க அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை. | அமுலல்ப்படுத்தப்பட வேண்டிய பேதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரசை∴ சேவை நாடுனர் நியதிச்சட்டத்தை விரைவாகத் தயாரித்து சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய30/2008 ஆம் இலக்க திருத்திய தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது 67 கடன் கோவைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசேதனையின் போது உரிய உத்தியோகத்தர்களுக்கு வழங்க கூடிய கடன் உச்ச அளவான கடனின் அளவு ரூபா 16.75 மில்லியானாக இருந்த போதிலும் சுற்றிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 41.23 மில்லியன் அதாவது ரூபா 24.48 மில்லியன் மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபையினால் வழங்கிய அங்கீகாரத்தின் பிரகாரம் கடன்பணம் ரூபா 250,000 உச்ச அளவு எல்லைக்கு உட்படுத்தப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட தீரண்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான தொகுதியின் நிதி விளைவுகள் ரூபா 37,680 மில்லியன் இலாபமாகவும் சபையின் நிதி விளைவுகள் ரூபா 36,978 மில்லியன் இலாபமாகவும் இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான தொகுதியின் மற்றும் சபையின் இலாபம் முறையே ரூபா 28,595 மில்லியன் மற்றும் ரூபா 28,569 மில்லியன் ஆகும். அதற்கிணங்க தொகுதியின் மற்றும் சபையின் நிதி விளைவுகள் முறையே ரூபா 9,085 மில்லியனாலும் ரூபா 8,409 மில்லியனாலும் அதிகரித்திருந்தது. மீளாய்வாண்டின் போது சபையின் வட்டி வருமானம் 12,221 மில்லியனால் அதிகரித்தமையானது மேற்கூறிய நிதி விளைவுகளின் முன்னேற்றத்திலிருந்து பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற சிரம சுவ காப்புறுதி முறைமையின் கீழ் ஒரு அங்கத்தவருக்கு | மருத்துவ செலவுகளை மீளளிப்புச் செய்யும் தொகையை 2018 ஆம் ஆண்டிலிருந்து அதிகரிக்கச் | நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு சிறந்த பிரதிபலன்களை |

| | | | |
|---|---|---|---|
| | ஆயுட்காலத்தில் மருத்துவ செலவுகளை மீளளிப்புச் செய்லவதற்காக உச்ச அளவாக ரூபா 50,000 வழங்கப்படுவதுடன் இந்த உச்ச அளவினை 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அதிகரிப்பது தொடர்பாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. எனினும் சபையின் பதவியணியினர் மேற்கூறிய காப்புறுதி முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தும் சபையில் முறையான அறவீடின்றி சபையின் பதவியணியினருக்கு வழங்கப்படுகின்ற மருத்துவ செலவுகளை மீளளிப்புச் செய்யும் முறைமையின் கீழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பெற்றுக்கொள்கின்ற சிகிச்சை மற்றும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாது பெற்றுக்கொள்கின்ற சிகிச்சைகளுக்காக ஒரு ஆண்டிற்கு வழங்கப்படுகின்ற மருத்துவ செலவுகளை மீளளிப்புச் செய்யும் படி முறையே ரூபா 75,000 இலிருந்து ரூபா 100,000 மற்றும் ரூபா 40,000 இலிருந்து ரூபா 60,000 வரை 2018 ஆம் ஆண்டின் போது அதகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க சிரமசுவ காப்புறுதி முறைமையின் கீழ் மருத்துவ உதவி செலவு ரூபா 23.47 மில்லியனாக காணப்பட்டிருந்தும் பதவியணியினரின் மருத்துவ செலவுகளை மீளளிப்புச் செய்யும் பணம் ரூபா 119.7 மில்லியனாக இருந்தது. | செய்வதற்கு சபையில் செயற்பட்டு வருகின்ற தொழிற்சங்கத்தின் பிரேரணைக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது மீளாய்வாண்டின் போது பதவியணியினர் மருத்துவ செலவு படி எதனையும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் உருவாகியுள்ள பொருளாதார சிக்கலினை முன்னிட்டு உருவாகியுள்ள அதிக பணவீக்க நிலைமையின் காரணமாக வைத்தியசாலை கட்டணங்களும் மருத்துவ செலவுகளும் அதிகரித்தனை காரணமாகக் கொண்டு மேற்கூறிய மீளளிப்புச் செலவு அதிகரித்திருந்தது. | வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | தோற்றுவிக்கப்பட்ட அதிகாரச் சட்டத்திற்கு இணங்க சபையின் பிரதான நிறைவேற்று உததியோகத்தர் சபையின் தலைவராக இருப்பார். எவ்வாறாயினும் நிதி நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட ஒரு நிறுவனமாக சபையின் பிரதான நிறைவேற்று | திருத்தம் செய்தல் சம்பந்தமாக சட்ட வரைவுத் திணைக்களத்தினால் ஆரம்ப வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கு இணைவாக | பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் வழங்கிய பணிப்புரையை அமுல்ப்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உத்தியோகத்தர் அதன் தலைவராக இருக்க வேண்டுமென ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 5(2) ஆம் பிரிவு திருத்தம் செய்யப்பட வேண்டுமென 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போது சிபார்சு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையும் அதிகாரச் சட்டத்தினை திருத்தம் செய்யும் நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. | பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் வழங்கப்பட்டுள்ள மேற்கூறிய சிபாரிசுக்கு இணங்க திருத்தங்களையும் அமுல்ப்படுத்துவது தொடர்பாக 2023 ஏப்ரல் 24 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன் இது சம்பந்தமாக நிதி அமைச்சின் செயலாளரின் கருத்துரைகளையும் ஆலோசனைகளையும் எழுத்து மூலம் பெற்று அது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சபை தீர்மானித்துள்ளது. | |
| (இ) | சபையானது அரசாங்கத்தின் பிணைகளில் நிதியை முதலீடு செய்கின்ற பிரதான ஒரு நிறுவனமாக இருந்த போதிலும் பிணைகளின் ஏல விற்பனையின் போது நேரடியாக விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வசதி (Direct Bidding facility) இலங்கை மத்திய வங்கியினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2016 கஸ்ட் 26 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போது இலங்கை மத்திய வங்கியின் தொடக்க கொடுக்கல் வாங்கல்தாரராக (Primary Dealer) பதிவு செய்து கொள்ளுமாறு பணிப்புரை வழங்கப்பட்டிருந்தும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு காணப்பட்ட சிக்கல், செலவு செய்வதற்கு ஏற்படுகின்ற மூலதனச் செலவு மட்டுப்பாடு, புதிய ஆட்சேர்ப்புக்களுக்கு காணப்படுகின்ற மட்டுப்பாடு, காணப்படுகின்ற சம்பள அளவுகளின் கீழ் அத்துறையில் தகமைபெற்ற திறமைவாய்ந்த உத்தியோகத்தர்களை சேர்த்தக்கொள்ளல், நிலைத்திருக்கச் செய்தல் மற்றும் மீளச் சேர்த்துக்கொள்வதற்கு உள்ள சிக்கல்களும் அது தொடர்பாக ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் காணப்படுகின்ற சிக்கல்கள் போன்ற விடயங்களை கவனித்த் பார்க்கும் போது இச் செயற்பாட்டினை மேற்கொள்ளல் நிகழ்காலகாலத்தில் மத்திய வங்கியின் மூலம் எதுவித செலவு இன்றியும் மேலதிக ஊழியர்களை ஈடுபடுத்தப்படாதும் | பொது முயற்சிகள் தொடர்பான குழுவினால் வழங்கிய பணிப்புரையை அமுல்ப்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பெற்றுக்கொள்ளப்படுகின்றது. | |
| (ஈ) 2022 ஒக்தோபர் மாதம் 19 ஆந் திகதி மோட்டார் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்துக்களை திருத்தம் செய்தல் பொருளாதார ரீதியாக வினைத்திறன் அற்றது என்பதனால் காப்புறுதி நிறுவனம் சபைக்கு செலுத்துவதற்கு இணங்கியுள்ள பணம் ரூபா 8,100,000 ஆகும். சபையினால் நிகழ்கால சந்தைப் பெறுமதியான ரூபா 11,000,000 இன் அடிப்படையில் காப்புறுதி செய்யாது 2018 ஆம் ஆண்டின் சந்தைப் பெறுமதியான ரூபா 8,125,000 இன் அடிப்படையில் முழுமையான காப்புறுதி செய்யப்பட்டதனால் சபைக்கு ரூபா 2,875,000 தொகையான காப்புறுதி நலன்களை இழக்கும் நிலைமை உருவாகியிருந்தது. | இந்த வாகனத்திற்க ஏற்பட்ட விபத்தின் காரணமாக ரூபா 8,100,000 காப்புறுதி இழப்பீட்டினை சபைக்கு வழங்குவதற்கு காப்புறுதி கம்பனி இணங்கியிருந்தது. சபையின் அனைத்து வாகனங்களையும் மீண்டும் நிகழ்கால சந்தைப் பெறுமதிக்க இணங்க மதிப்பீட செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் புதிய மதிப்பீட்டுப் பெறுமதிக்கு உரிய காப்புறுதியினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த வாகனத்திற்கு விபத்து ஏற்பட்டது 2022 ஒக்தேபர் 09 ஆந் திகதி என்பதுடன் இதுவரை வாகன மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததனால் கிரயத்திற்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. சபையினால் புதிய காப்புறுதி ஆண்டிற்காக நிகழ்கால சந்தைப் பெறுமதிக்கு மதிப்பீடு செய்வதற்குரிய காலப்பகுதியாக இருந்தது 2022 நவம்பர் 03 ஆந திகதியிலிருந்தாகும். | சபைக்கு ஏற்பட்ட நட்டத்தைப் பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கும் நிகழ்கால சந்தைப் பெறுமதிக்கு இணங்க காப்புறுதி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பட்டியல்படுத்தப்பட்ட 13 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் சராசரிக் கிரயம் ரூபா 909.89 மில்லியன் ஆன பகுதிக்காக 2022 ஆம் ஆண்டில் பங்கிலாப வருமானம் கிடைத்திருக்கவில்லை. அவற்றில் | 2015 இலிருந்து 2021 வரை தொடர்ச்சியாக பங்கிலாபம் கிடைக்காத 02 கம்பனிகள் மாத்திரம் உள்ளதுடன் ஏனைய 08 கம்பனிகளுக்காக 2015 இலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை அவ்வப்போது வருடாந்தம் பங்கிலாபமாக மொத்தமாக ரூபா 171 | அங்கத்தவர்களுக்கு உயர்ந்த பிரதி பலனை வழங்குவதற்கு முடியுமான வகையில் முதலீடுகளை முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2 கம்பனிகளிடமிருந்து 2015 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டுவரை தொடர்ச்சியாக பங்கிலாபம் கிடைத்திருக்காததுடன் 11 கம்பனிகளுக்காக 2015 இலிருந்து 2022 வரையான காலத்திற்கு அவ்வப்போது பங்கிலாபத்தின் ஒரு பகுதி கிடைத்திருந்தது. | மில்லியன் சபைக்கு கிடைத்துள்ளது. 15 கம்பனிகளில் 4கம்பனிகளுக்கு 2023 ஏப்ரல் மாதமளவில் பங்கிலாபமாக ரூபா 52.6 மில்லியன் கிடைத்துள்ளது அவ்வாறே ஏனைய கம்பனிகளுக்காகவும் கம்பனிகளின் இலாபத்தன்மையின் அடிப்படையில் பங்கிலாபம் எதிர்காலத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன். | |
| (ஆ) | சபையினால் கம்பனியில் மேற்கொண்ட பங்கு கொள்வனவுகளைப் பரீட்சித்த போது 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது முறையே 7,106,832 பங்குகளில் மற்றும் 615,542 பங்குகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. அக்கம்பனிகளின் கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைப் பரீட்சித்த போது 2017, 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது நட்டமடைந்த ஒரு நிறுவனம் காணப்பட்டிருந்தும் அது தொடர்பாக கவனம் செலுத்தாது 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 64.01 மில்லியன் மற்றும் ரூபா 4.99 மில்லியன் செலவு செய்து பங்குகள் கொள்வனவு செய்தல் இடம்பெற்றிருந்தது. மேலும் 2022 திசெம்பர் கணக்காய்வுத் திகதி வரை அக்கம்பனிகள் பங்குச் சந்தை சட்ட விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக watch List இன் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சபையின் பங்கு முதலீட்டு தளத்தை பல்வகைப்படுத்தும் குறிக்கோளில் அந்த ஆண்டில் வைத்தியசாலை துறையில் காணப்பட்ட நெரிசலும் அதிக வேண்டுதலும் காரணமாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வளர்ச்சி சந்தர்ப்பங்களை பகுப்பாய்வு செய்ததன் பின்னர் 2021 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டில் வைத்தியசாலை துறைக்குரிய நவலோக கம்பனியின் வழங்கிய பங்கு மூலதனத்தில் 0.5 சதவீதம் அளவான பங்குகளில் முதலீடு செய்யப்பட்டது. 2020/2021 கணக்காண்டின் போது நவலோக கம்பனி நட்ட நிலைமையை காட்டியிருந்தும் நவலோக வைத்தியசாலையை தொகுதியாக எடுத்துக்கொள்கையில் 2020/2021 நிதிக்கூற்றுக்களில் இலாபத்தன்மை சுட்டிக்காட்டப்பட்டது. | அங்கத்தகவர்களுக்கு உயர்ந்த பிரதிபலன்களை வழங்குவதற்கு முடியுமான வகையில் முதலீட்டினை முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை மத்திய வங்கியினால் 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 23 ஏல விற்பனை சந்தர்ப்பங்களின் போது சமர்ப்பிக்கப்பட்ட தொகுதி இலக்கங்களுக்கு மத்தியில் திசைசேரிப் பிணை முறி தொகுதி இலக்கம் 28 இற்காக | முதலீட்டின் போது வினைத்திறன் விகிதம் உயர்ந்து செல்லல் நிலைமையின் கீழ் உயர்வாக கேள்வி மனுவை சமர்ப்பிப்பதற்கான தந்திரோபாயமாகும். இந்த வகையில் ஏனைய | அங்கத்தவர்களுக்கு அதிக பிரதிபலன்களை வழங்குவதற்கு முடியுமான வகையில் முதலீட்டு வாய்ப்புக்களை முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையின் மூலம் கேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவற்றில் தொகுதி இலக்கம் 12 இற்காக சமர்ப்பிக்கப்பட்ட கேட்பு மனுக்களில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட கேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அதன் மூலம் நிதியம் பிணை முறி ஏல விற்பனைக்குச் சமர்பித்த அதிக பெறுபேற்றுக்கு முதலீடு செய்வதற்கு இருந்த வாய்ப்பு இழக்கப்பட்டிரந்தது என்பது அவதானிக்கப்பட்டது. இதன் போது சபையின் GS Committee மூலம் கேட்பு மனுத் தீர்மானத்தின் போது சந்தைக் காரணி கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தும் காணப்படுகின்ற சந்தை நிலைமையை மிகைத்து உயர்ந்த பெறுபேற்று விகிதத்திற்குச் சென்றதால் இவ்வாறு கேட்பு மனு ஏற்றுக்கொள்ளலானது குறைவடைந்தமைக்கு காரணமாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | சந்தர்ப்பங்களிலும் நடவடிக்கை எடுக்கும் போது வெற்றிகரமான பெறுபேறு பெற்றுக்கொள்ளப்பட்டது. அவ்வாறே சில சந்தர்ப்பங்களில் மத்திய வங்கியினால் ஏல விற்பனைக்காக சமர்ப்பிக்கின்ற கேட்பு மனு பெறுமதியினை விட குறைந்த றுெமதி ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது சபை எதிர்பார்த்த விகிதத்தின் அடிப்படையில சமர்ப்பிக்கப்படுகின்ற கேள்வி மனுக்கள் நிராகரிக்கப்படுவதில் அதிக அளவில் போட்டி விண்ணப்பதாரர்களின் எதிர்பாராத நடத்தைகளின் அடிப்படையிலும் நாங்கள் எதிர்பார்க்கின்ற பெறுபேற்றிற்கு தாக்கம் ஏற்படுத்தப்படும். | |
| (ஈ) | பிரதிபலன் கொடுப்பனவுகளை 09 நாட்களுக்குள் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டு அது தொடர்பாக அங்கத்தகவர்கள் மற்றும் தொழில் தருனர்களுக்கு தெளிவுபடுத்தும் 15 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் அதன் செயல்முன்னேற்றம் 05 நிகழ்ச்சித்திட்டங்களாக இருந்ததுடன் பிரதிபலன்களைச் செலுத்தலினை பன்முகப்படுத்தும் எண்ணத்தில் 05 கிளைகளைத் தோற்றுவிப்பதற்கும் 01 ,VIP கவுன்டரை உருவாக்குவதற்கும் திட்டமிடப்பட்டிருந்தும் அந்நடவடிக்கை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை | 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட எரிபொருள் பிரச்சினையின் காரணமாக போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு சேவை நாடுனர்களுக்கும் எங்கள் நிறுவனத்திற்கும் முடியாதிருந்தது. பிரதிபலன்கள் கொடுப்பனவு செய்வதனை பன்முகப்படுத்தும் குறிக்கோளில் இன்னும் 05 பிராந்திய அலுவலகங்களை அதற்கு பங்குபற்றச் செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் பதவியணியினர்களின் மட்டுப்பாடு மற்றும் ஏனைய நடைமுறைச் சிக்கலின் அடிப்படையில் பிரதிபலன் கொடுப்பனவுகளானது தற்பொழுது | திட்டமிட்டவாறு குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொடுப்பனவுகளை மேற்கொள்கின்ற 07 பிராந்திய அலுவலகங்களின் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டுமென பணிப்பாளர் சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. | |
| (உ) | நிதியத்தின் நிதிசார் ஸ்திரத்தன்மைக்கு இணங்க அங்கத்தவர்களுக்கு 10 நலன்புரி ரீதியான திட்டங்கள் நிதியத்தின் ரூபா 2.7 மில்லியன் செலவில் செயற்படும் அங்கத்தவர்களுக்காக அமுல்ப்படுத்தப்பட்டது. அந்த நலன்பரிச் சேவைகளின் கீழ் நிதி உதவிப் பெறுமதியை கடந்த 6 ஆண்டுகளுக்கும் 13 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக அதிகரிக்கச் செய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபையின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட நலன்புரி பலன்கள் அங்கத்தவர்களின் விசேட பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளாது அங்கத்துவ மீதிக்கு எதிரீடு செய்யப்படாததுடன் ஒரு விசேட பிரதிபலனாகும். இப்பிரதிபலன் சபையின் இலாப நட்டக் கணக்கின் ஒரு செலவாக இருப்பதனால் முறையான மதிப்பீடின்றியும் கட்டுப்பாடின்றியும் நலன்புரி பிரதிபலனை வழங்குதல் ஒட்டுமொத்த அங்கத்தவர்களுக்கும் ஆண்டின் இறுதியில் செலுத்தப்படுகின்ற வட்டி மற்றும் பங்கிலாப சதவீதம் குறைவடைவதற்கு தாக்கமளித்துள்ளது. | அங்கத்தவர்களின் பங்களிப்பு பணத்திலிருந்து ஒழுங்குமுறைப்படுத்தப் பட்ட ஒரு நிதியம் என்பதனால் அங்கத்தவர்களுக்கு அதிக பிரதிபலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சபை அதிகாரச் சட்டத்தின் 18(1) ஆம் பிரிவு மற்றும் 1988 இன் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பிரகாரம் சுயதொழிலில் ஈடுபட்டுள்ள நபர் அல்லது புலம்பெயர்ந்த நபர் அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்து கொள்வதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. Labour Force Survey – Annual Report 2019 இன் பிரகாரம் இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள முழு | | |

| | | | |
|---|---|---|---|
| | சுயதொழிலாளர்களின் எண்ணிக்கையான 3,233,290 இல் நிதியத்தில் பதிவு செய்துள்ள சுய தொழிலாளர்களின் எண்ணிக்கை 43,524 அதாவது 1.35 சதவீதமாகும். இது சம்பந்தமாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | பதிவுசெள்துள்ள சுயதொழில்களில் 32,120 எண்ணிக்கையானவர்கள் செயற்படாதுள்ளதுடன் அதற்கிணங்க செயற்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 10,404 ஆன மிகவும் குறைந்த பெறுமதியில் காணப்பட்டது. அங்கத்துவம் செயற்பாடற்ற சய தொழில்களில் 90 சுயதொழிலாளர்களை செயற்படும் நிலைக்கு கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் 32 தொழிலாளர்கள் மாத்திரம் செயற்படும் நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். | சரியான தெளிவுபடுத்தல் நடைமுறையை பின்பற்றாமை அங்கத்தவர்களால் செலுத்தப்பட்ட பங்களிப்பு பணத்தை முறைப்படியாக அங்கத்துவ கணக்கிற்கு நாளதுவரையாக்காமை 2015 ஆம் ஆண்டிற்கான பிரதிபலன் செலுத்தும் நிபந்தனை மற்றும் அங்கத்துவ மாதாந்த பங்களிப்பு பணத்தை அதிகரித்தல் தொடர்பாக அங்கத்தவர்களையும் சுயதொழிலில் ஈடுபட்டுள்ளவர்களையும் தெளிவுபடுத்தாமை மற்றும் 2020 - 2022 காலத்தில் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை முதலிய விடயங்களின் அடிப்படையில் செயற்பாடற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. | சுயதொழிலிலில் ஈடுபட்டுள்ளவர்களை பதிவுசெய்வதற்காக முறையான ஒரு வேலைத் திட்டத்தினை தயாரித்து அமுல்ப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | பின்வரும் கடந்த 3 ஆண்டுகளின் பிரதிபலன்கள் வழங்கப்பட்டுள்ள சுயதொழிலாளர்களின் தரவுகளின் பிரகாரம் கண் வில்லைக்கு பங்களிப்புச் செய்தல், இருதய சத்திரசிகிச்சைகளுக்காக உதவியளித்தல், ஆயுள் காப்புறுதி மற்றும் நிரந்தர பலவீனமடைதல் இழப்பீடு முதலிய பிரதிபலன்களை பெற்றுக்கொண்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை குறைந்த பெறுமதியில் காணப்பட்டது. | இதற்கு பிரதான காரணம் 3 ஆண்டுகளாக மாதாந்த தவணைப் பணத்தை முறையாக செலுத்தாதிருந்தமை அங்கத்தவர்களால் பிரதிபலன்களை வேண்டிக்கொள்ளும் போது முறையாக நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் சமர்ப்பிக்காமையும் அங்கத்தவர்களின் தெரிந்துகொள்ளாமையுமாகும் . | பிரதிபலன்களை வழங்குதல் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக அங்கத்தவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| பிரதிபலனின் வகை | நலனாளிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 2020 | 2021 | 2022 |
| கண் வில்லைக்காக பங்களித்தல் | 14 | 16 | 10 |
| இருதய சத்திர சிகிச்சைக்கு உதவியளித்தல் | 05 | 11 | 01 |
| ஆயுள் காப்புறுதி | 08 | 05 | 08 |
| நிரந்தர பலவீன இழப்பீடு | 02 | 03 | 01 |
| | ...... | .... | .... |
| மொத்தம் | 29 | 35 | 20 |
| | …. | …. | …. |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (iii) | புலம்பெயர்ந்த தொழிலாளர்களும் நிதியத்தில் பதிவு செய்துகொள்வதற்கு 1988 இன் 47 ஆம்இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை (திருத்திய) அதிகாரச் சட்டத்தில் பணிக்கப்பட்டிருந்தும் சபையின் அங்கத்துவத்தை வழங்கியுள்ள மொத்த புலம்பெயர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது முறையே 04, 09 மற்றும் 16 ஆகும். | புலம்பெயர்ந்த தொழிலலாளர்களை எங்கள் பிரிவில் பதிவுசெய்து கொள்வதற்காக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் கீழ் நிகழ்ச்சித்திட்டம் தொடங்கிவைக்கப்பட்டிருந்தும் அப்பணியகத்தினாலும் புலம்பெயர்ந்தவர்களுக்காக பிரதிபலன் நிகழ்ச்சித்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதனால் எமது பிரிவில் பதிவுசெய்தல் தடைப்பட்டுள்ளது. | சபையில் அங்கத்துவத்தினை வழங்குதல் சம்பந்தமாக தெளிவுபடுத்தலினை அதிகரிக்கச் செய்தல் வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 41.57 மில்லியன் பெறுமதியான 205 லெப்டொப் கணனிகளை கொள்வனவு செய்யும் பெறுகையின் போது ஒரு பெறுவனவாக | நாட்டில் காணப்பட்ட கொரோனா நிலைமை பாதகமான பொருளாதார நிலைமை என்பவற்றின் | பெறுகை வழிகட்டிக் கோவையின் வழிகாட்டி 3.2 மற்றும் 3.4 இன் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| திட்டமிடப்படாது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் தேசிய போட்டி விலை முறைமையினைப் பின்பற்றி அதிக போட்டியாளர் விலை மனுக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 04 சந்தர்ப்பங்களின் போது விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றி கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அடிப்படையில் கட்டளையை பொறுப்பேற்ற கம்பனிக்கு பொருட்களை வழங்குவதற்கு முடியாமையும் அதிக வேண்டுதலினை முன்னிட்டு லெப்டொப் கணனிகளை கைக்காசிற்கே வழங்குவதற்கு கம்பனி முன்னுரிமை அளித்திருந்தது. அதற்கிணங்க ஒரு சந்தர்பத்தில் ரூபா 10 மில்லியனுக்கு அதிகரிக்காத வகையில் பல கட்டங்களின் கீழ் சில லெப்டொப் கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டன. இதற்கிணங்க 08 மாதங்களான குறுகிய காலத்தில் 205 லெப்டொப் கணனிகளை கொள்வனவு செய்வதற்கு சபைக்கு முடியுமாகவிருந்தது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| சபையின் முதலீட்டுப் பிரிவினை வலுப்படுத்தீ தற்பொழுது மிகுந்த பாதுகாப்பாகவும் சிறந்த உழைப்பினை பேணுவதற்காகவும் மீள்கட்டமைப்புச் செய்வதற்கு உட்படுத்துமாறு 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தின் போது பணிப்புரை வழங்கப்பட்டிருந்தும் முதலீட்டுப் பிரிவின் முதலீட்டு வாய்ப்பினை முகாமைத்துவம் செய்வதற்கு நேரடியாக தொடர்புபடுகின்ற 03 பதவிப் பெயர்களில் காணப்படுகின்ற 06 வெற்றிடங்கள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இத்துறையினுள் தனியார் துறையில் அதிக சம்பளம் செலுத்தப்படுவதனால் சபைக்குச்சேர்த்தக்கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் குறுகிய காலத்தில் இராஜினாமா செய்வதன் அடிப்படையில் உரிய வெற்றிடம் நிரந்தமாகக் காணப்படுகின்றது. அவ்வாறே விண்ணப்பங்களைச் கோரும் போதும் பதவி வகிப்பதற்கான தகமைகளைப் பெற்றுள்ள மற்றும் துறையில் அனுபவமுள்ள விண்ணப்பதாரர்கள் இச்சம்பள அளவின் கீழ் விண்ணபிப்பதில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | சம்பள அளவினை திருத்தம் செய்வதற்காக அங்கீகாரத்தினைப் பெற்று பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் அறிவுரைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |